# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 141/ந/2024

நாள். 24.04.2025

| | | |
|---|---|---|
| திரு.R.மயில்சாமி,<br>புதுவிளாங்குடி, மதுரை | – | முறையீட்டு மனுதாரர் |
| நகராட்சி ஆணையர்,<br>விருதுநகர் நகராட்சி,<br>விருதுநகர். | – | எதிர்மனுதாரர் |

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 04.12.2023 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.12.2023 அன்று பெறப்பட்டு, 141/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 04.12.2023 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சி, புல்லக்கோட்டை ரோடு, சிவகாமிபுரம், பைபாஸ் ரோடு அருகில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீபாலாஜி மஹால் திருமண மண்டபம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் ஸ்ரீபாலாஜி மஹால் திருமண மண்டபம் கட்டடத்திற்கு நான்கு புறமும் இடைவெளி இடம் (set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி திருமண மண்டபத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம்

(parking space) விடாமல் கட்டடம் கட்டப்பட்டுள்ளதால், விஷேசத்திற்கு வரும் நபர்களுடைய இரண்டு சக்கர வாகனங்கள், மூன்று சககர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதினால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சில சமயங்களில் விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. மேலும், பள்ளி, கல்லூரி வாகனங்களும், இவ்வழியே செல்லமுடியாமல், பள்ளி, மாணவ, மாணவியர்கள் உரிய நேரத்திற்கு பள்ளி, கல்லூரிக்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள்.

மேற்படி ஸ்ரீபாலாஜி மஹால் திருமண மண்டபம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டடம் என்பதால் 1973ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தால் ஒப்புதல் பெறாமல் இயங்கி வருகிறது. மேலும் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) 1965 பிரிவு 2(8)–ன்படி வருவாய்துறையிடம் உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக திருமண மஹால் செயல்பட்டு வருகிறது.

எனவே, ஸ்ரீபாலாஜி மஹால் திருமண மண்டப கட்டடம், கூடுதலாக கட்டப்பட்டும், நான்கு புறமும் இடைவெளி இடம் (set back spaces) விடாமலும், வாகன நிறுத்துவதற்கு (parking spaces) இடம் விடாமலும் மற்றும் உரிய அரசு துறைகளிடம் அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டு வரும் மேற்படி திருமண மண்டபத்தை, தமிழ்நாடு அரசாணை எண்.7 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. 21724/2016/BA2, 03.01.2013 உத்தரவின்படியும் மற்றும் 03.01.2013 உத்தரவின்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன்படி stop work notice/notice calling for approval plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் (lock and seal and demolition notice) வழங்கி மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்அவர்களை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து விருதுநகர் நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 09.01.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. விருதுநகர் நகராட்சி ஆணையர் தனது 06.02.2024 நாளிட்ட அறிக்கையில கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

" விருதுநகர் நகராட்சி சர்வே வார்டு 22, பிளாக் 2, நகரளவு எண்.1/1, கதவு எண்.125ஏ9–ல் கட்டப்பட்டுள்ள பாலாஜி மஹால் கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டு, பாலாஜி மஹாலின் மேலாளரிடம் விசாரணை மேற் கொள்ளப்பட்டதில் கட்டிடம் சுமார் 18 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டது என்றும் மேற்படி கட்டிடத்தின் அனுமதி குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க தெரிவித்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971(தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56 & 57–ன்படி படிவம்–1 (see Rule 3) Notice for Production of Documents அறிவிப்பு 22.01.2024 அன்று சார்பு செய்யப்பட்டது.

திருவாளர்கள் வெங்கட்ராமன் மற்றும் ஜோதிராஜ் என்பவர்களின் 24.01.2024ந் தேதிய கடிதத்தில் மேற்படி கட்டிடத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் கட்டிட அனுமதி குறித்த விபரங்கள் அவர்களது தந்தை வசம் இருந்தது என்றும், அவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு காலமாகி

விட்டதால், ஆவணங்கள் ஏதும் அவர்களது வசம் ஒப்படைக்கவில்லை என்றும், அவர்களது சொந்த ஊர் ஆவுடையாபுரத்தில் இருந்து தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதால் மேற்படி ஆவணங்கள் எங்குள்ளது என்று தேடி பார்ப்பதற்கு 15 தினங்கள் கால அவகாசம் கோரியுள்ளார். அவர்கள் கடிதம் வரப்பெற்ற 25.01.2024ம் தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் அறிவிப்பில் கோரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971( தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56 & 57ன்படி உரிய சட்ட ரீதியான மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார்."

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 09.10.2024 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 19.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. பின்னர் இருவரையும் 08.10.2024 அன்று நடைபெறும் விசாரணையில் கலந்து கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவ 24.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 08.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் நகராட்சி புல்லக்கோட்டை ரோடு, சிவகாமிபுரம் பைபாஸ் ரோடு அருகில் கட்டப்பட்டுள்ள ஸ்ரீபாலாஜி மஹால் திருமணமண்டபம் அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. திருமண மண்டபம் கட்டடத்திற்கு நான்குபுறமும் இடைவெளி இடம் (set back) விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேற்படி திருமண மண்டபத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் (parking spaces) விடாமல் கட்டப்பட்டுள்ளதால் விஷேசத்திற்கு வரும் நபர்களுடைய இரண்டு சக்கர வாகனங்கள், நான்கு சக்கர வாகனங்கள் ரோட்டில் நிறுத்துவதால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு சிலசமயங்களில் விபத்துகளும் ஏற்பட்டு வருகிறது. மேலும் பள்ளி, கல்லூரி வாகனங்களும் இவ்வழியே செல்ல முடியாமல் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர் உரிய நேரத்தில் பள்ளி கல்லூரிக்கு செல்ல முடியாமல் மிகவும் சிரமப்படுகின்றனர். நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன்படி stop work notice/notice calling for approval plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கியும் இதுநாள் வரைக்கும் நடவடிக்கை எடுக்க மறுத்து வரும் நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியாக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும், G.O.Ms.No.07 Housing and Urban Develepoment UD4(1) Department dt. 10.01.2023–ன்படி மேற்படி பாலாஜி மஹால் கட்டிடத்தின் மீது மூடி முத்திரையிடுதல் lock and seal and demolition notice வழங்கி உரிய விரைவான நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன். மேற்படி பாலாஜி மஹால் நகர் ஊரமைப்புசட்டம் 1971–ன் பிரிவுகள் 56 மற்றும் 57 உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன்படி அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக நடவடிக்கை ஏதும் இதுநாள் வரை எடுக்காத நகராட்சி ஆணையாளர் மற்றும் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறைரீதியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும் G.O.Ms.No.07 Housing and Urban Develepoment UD4(1) Department dt. 10.01.2023–ன்படி மேற்படி பாலாஜி மஹால் கட்டிடத்தின் மீது மூடி

முத்திரையிடுதல் lock and seal and demolition notice வழங்கி உரிய விரைவான நடவடிக்கை எடுக்க இம்முறைமன்ற நடுவத்தினை கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

5) விருதுநகர் ஆணையர் மற்றும் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர் இருவரும் 08.10.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்கு மூலத்தை தெரிவித்துள்ளனர்.

மனுதாரர் தெரிவித்துள்ள கட்டிடம் நேராய்வு செய்யப்பட்டு பாலாஜி மஹாலின் மேலாளரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் கட்டிம் சுமார் 18 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்பட்டது. மேற்படி கட்டிடத்தின் அனுமதி குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்க தெரிவித்து தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56, 57ன்படி படிவம்–I (see rule 3) Notice for production of documents அறிவிப்பு 22.01.2024 அன்று சார்பு செய்யப்பட்டது.

திரு.வெங்கட்ராமன் மற்றும் ஜோதிராஜ் என்பவர்கள் 24.01.2024ம் தேதிய கடிதத்தில் மேற்படி கட்டிடத்திற்குரிய ஆவணங்கள் மற்றும் அனுமதி குறித்த விவரங்கள் அவரது தந்தை வசம் இருந்தது என்றும் அவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் காலமாகிவிட்டதால் ஆவணங்கள் ஏதும் அவர்களது வசம் ஒப்படைக்கவில்லை என்றும் அவர்களது சொந்த ஊர் ஆவுடையாபுரத்தில் இருந்து தற்போது ராஜபாளையத்தில் குடியிருந்து வருவதால் மேற்படி ஆவணங்கள் எங்குள்ளது என்று தேடி பார்ப்பதற்கு 15 நாட்கள் கால அவகாசம் கோரியுள்ளனர். அவர்கள் கடிதம் வரப்பெற்ற 24.01.2024ம் தேதியிலிருந்து 15 தினங்களுக்குள் அறிவிப்பில் கோரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கவில்லை எனில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56, 57ன்படி உரிய சட்ட ரீதியான மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தெரிவித்துள்ளனர். பாலாஜி மஹால் கட்டிட உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56 & 57ன்படி உரிய சட்ட ரீதியான அறிவிப்பு வழங்கி 45 தினங்களுக்குள் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மேலும் 06.02.2024 நாளிட்ட நகராட்சி ஆணையாளர், விருதுநகர் அவர்களின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறோம்” என தெரிவித்துள்ளனர்.

6)அதன் பின்னர் ஸ்ரீபாலாஜி மஹால் உரிமையாளரை 10.12.2024 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 28.11.2024 நாளிட்ட கடிதம் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

7)ஸ்ரீபாலாஜி மஹால் உரிமையாளர் 10.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார்.

விருதுநகர், புல்லக்கோட்டை சாலையில் உள்ள எனக்கு சொந்தமான ஸ்ரீ பாலாஜி மஹால் என்ற பெயரில் உள்ள திருமண மண்டபத்திற்கு முன் சுமார் 60 அடி சாலை உள்ளது. மண்டபத்திற்கு பின்புறம் எனக்கு சொந்தமான நிலம் 5 அடி வரை காலியிடம் உள்ளது. ஒருபுறம் தெரு, மற்றொரு புறம் 2 அடி காலி நிலம் உள்ளது.

இந்த மண்டபம் 2011–2022–ல் எனது தகப்பனரால் கட்டிட அனுமதி பெற்று கட்டப்பட்டது.

மேற்படி மண்டபத்தின் அருகில் சுமார் 200 அடி தூரத்தில் எனக்கு சொந்தமான காம்பவுண்டு நிலம் உள்ளது. அந்த நிலத்தை மண்டபத்திற்கு வரும் வாகன நிறுத்துமிடம் பார்க்கிங் வசதிக்காக தயார் செய்துள்ளோம்.

மேற்படி மண்டபம் பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் வகையில் இல்லை.

பொதுமக்களுக்கு குறைந்த வாடகைக்கு விடுகிறோம். பொதுநலன் மற்றும் கஷ்டப்படும் மக்களுக்கு சேவையாக செய்து வருகிறோம். மேலும் அரசு நிகழ்ச்சிகள், காவல்துறை, மற்றும் தேர்தல் நேரங்களில் வரும் இராணுவ வீரர்கள் தங்குவதற்கும், புத்தக கண்காட்சிக்கு வரும் அரசு அலுவலர்கள் தங்குவதற்கும், போராட்டம் நடைபெறும் காலங்களில் அவர்களை அடைத்து வைப்பதற்கும் இலவசமாக கொடுத்து வருகிறோம் எனவும் நகராட்சி கூறும் திருத்தங்களை செய்யவும் தயாராக உள்ளோம். நகராட்சி வழங்கிய நோட்டீஸ்–க்கு கடந்த இரண்டு மாதத்திற்கு முன்னர் என்னிடம் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பான ஆவணங்களின் நகல்கள் அனைத்தையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், விருதுநகர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் மேற்படி ஸ்ரீபாலாஜி மஹால் திருமண மண்டபம், அனுமதிக்கு கூடுதலாக கட்டடம் கட்டியும், கட்டடத்தை சுற்றி நான்குபுறமும் இடைவெளி விடாமலும்(set back space), மஹாலுக்கு வரும் பொதுமக்கள் பயன்படுத்தும் இருசக்கர, மூன்று சக்கர, நான்குசக்கர வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதி(parking space) விடாமலும், 1973ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி அக்கட்டடத்திற்கு நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறாமலும், தமிழ்நாடு பொதுகட்டடம் (உரிமம்) 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய்துறையிடம் உரிமம் பெறாமலும் சட்டத்திற்கு புறம்பாக திருமண மஹால் செயல்பட்டு வருகிறது என்றும் எனவே, தமிழ்நாடு அரசாணை எண்.7, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023 மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.21724/2016/BA2 நாள்.03.01.2017ன் உத்தரவின்படியும் மற்றும் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971ன் பிரிவுகள் 56 & 57 உடன் படிக்கப்பட்ட பிரிவு 85ன்படி stop work notice/notice calling for approval plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் (lock and seal and demolition notice) வழங்கி விரைவான நடவடிக்கை எடுக்க கோரியுள்ளார்.

மேற்படி ஸ்ரீபாலாஜி மஹால் கட்டிடம் சுமார் 18 வருடங்களுக்கு முன்பு கட்டி முடிக்கப்பட்டது என்பதையும், கட்டிடத்தின் அனுமதி குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கத் தெரிவித்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971 (தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56 & 57 ன் படி படிவம்–1 (see rule 3) Notice for production of documents 22.01.2024 அன்று நகராட்சியின் சார்பில் சார்பு செய்யப்பட்டுள்ளதையும், உரிமையாளர்கள் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்க 15 தினங்கள்

அவகாசம் கோரியதனால், 15 தினங்களுக்குள் அறிவிப்பில் கோரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை எனில் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971( தமிழ்நாடு சட்டம் 1972) பிரிவு 56 & 57ன்படி உரிய சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என உரிமையாளருக்கு நகராட்சியின் மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதையும் விருதுநகர் நகராட்சி ஆணையரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

விருதுநகர், புல்லக்கோட்டை சாலையில் உள்ள தனக்கு சொந்தமான ஸ்ரீ பாலாஜி மஹால் என்ற பெயரில் உள்ள திருமண மண்டபத்திற்கு முன் சுமார் 60அடி சாலை உள்ளது எனவும், மண்டபத்திற்கு பின்புறம் தங்களுக்கு சொந்தமான நிலம் 5 அடி வரை காலியிடம் உள்ளது, ஒரு புறம் தெரு, மற்றொரு புறம் 2 அடி காலி நிலம் உள்ளது என்பதையும், மேற்படி மண்டபத்திற்கு அருகில் சுமார் 200 அடி தூரத்தில் தங்களுக்கு சொந்தமான காம்பவுண்டு இடத்தில் வாகன நிறுத்துமிட வசதி செய்துகொடுத்துள்ளதையும், நகராட்சி கூறும் திருத்தங்களை செய்யத்தயாராக உள்ளோம் என தெரிவித்துள்ளதை மேற்படி ஸ்ரீ பாலாஜி மஹால் உரிமையாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நிலையில் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் ந.க. எண்.25562/2024/TCP 10 நாள்.24.12.2024–ல் திரு.A.வெங்கட்ராமன் மற்றும் A.ஜோதிராஜா ஆகியோருக்கு முகவரியிட்ட கடிதத்தில் மேற்படி மஹால் அனுமதியற்ற கட்டுமானம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண்.W.P.(MD) No.27455 of 2024 தீர்ப்பு நாள்.18.11.2024–ல் ஆணையாளர், விருதுநகர் நகராட்சி அவர்களின் 16.10.2024 நாளிட்ட அறிவிப்பினை நிறுத்தி வைக்குமாறு மனுதாரர்கள் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 80(3)ன் கீழ் நகர் ஊரமைப்பு இயக்குநருக்கு சமர்ப்பித்த மனுவின் மீது இரண்டு வாரங்களுக்குள் உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. விருதுநகர் நகராட்சியால் 16.10.2024–ல் வழங்கப்பட்ட அனுமதியற்ற கட்டுமானஅறிவிப்பை நிறுத்தி வைக்குமாறு நகர் ஊரமைப்பு சட்டம், 1971 பிரிவு 80(3)–ன் கீழ் பெறப்பட்ட தங்களது மனுவின் மீது நடவடிக்கை எடுக்க இச்சட்டப்பிரிவின் கீழ் வழிவகை இல்லை என உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் விருதுநகர் நகராட்சி ஆணையர் தனது 09.01.2025 நாளிட்ட கடிதத்தில், திரு.வெங்கட்ராமன் மற்றும் திரு.ஜெயஜோதிராஜா அவர்களால் தொடரப்பட்ட சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை வழக்கு எண்.WP(MD) No.27455 of 2024, WP(MD) 23286 of 2024–ல் தீர்ப்பாணை நாள்.18.11.2024ல் திரு.வெங்கட்ராமன் மற்றும் திரு.ஜெயஜோதிராஜா அவர்களால் கட்டிட அனுமதி கோரி சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு விண்ணப்பத்தின் மீது இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை, சென்னை அவர்களை நீதிமன்ற தீர்ப்பாணை பெறப்பட்ட நாளிலிருந்து இரண்டு வார காலத்திற்குள் உரிய சட்டரீதியான உத்தரவு பிறப்பிக்க தெரிவித்தும், மேற்படி இரண்டு வார காலத்திற்கு மேற்படி கட்டிடத்தின் மீது எவ்வித சட்ட ரீதியான மேல் நடவடிக்கை தொடர தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் கடிதத்தில் உள்ளாட்சிக்கு வழங்கப்பட்ட அதிகாரப்பகிர்வில் வணிகக்கட்டிடங்களுக்கு 2000 சதுர அடி பரப்பிற்கு மட்டும் அனுமதி வழங்க அதிகார பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது எனவும், மனுதாரர் அனுமதிக்கு மாறாக விதி பாதிப்புகளுடன் கல்யாண

மண்டப கட்டிடம் கட்டப்படடு பயன்பாட்டில் உள்ளதால் நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 பிரிவு 56(ம) 57–ன் கீழ் உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து உதவி இயக்குநர்/துணை இயக்குநர்(பொ) விருதுநகர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதையும் விருதுநகர் நகராட்சி ஆணையரின் 09.01.2025 நாளிட்ட கடிதத்தின் வழி அறியமுடிகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் புகார் மனு தொடர்பான மாண்பமை உயர்நீதிமன்றம், சென்னை மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No.27455 of 2024 and WMP (MD) No. 23286 of 2024 நாள்.18.11.2024–ல் ஆணையிட்டுள்ளவாறும், நகர ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்கள் 24.12.2024 நாளிட்ட கடிதத்தில் அறிவுறுத்தியுள்ளவாறு, நகர் ஊரமைப்புச்சட்டம் 1971 –ன் கீழ் நடவடிக்கையினை தொடருமாறு விருதுநகர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் இந்நேர்வில் முறையான அனுமதி பெறாத கட்டிடம் குறித்து காலதாமதமாக நடவடிக்கைகளை மேற்கொண்ட சம்பந்தப்பட்ட அலுவலர்கள்/பணியாளர்கள் மீது துறைரீதியான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்கிறது.

2025–ஆம் ஆண்டு, ஏப்ரல் திங்கள் 24–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திருR.மயில்சாமி,
த/பெ.திரு.இராமலிங்கம்,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,மதுரை – 625 018.

2) நகராட்சி ஆணையர்,
விருதுநகர் நகராட்சி,
விருதுநகர்.
விருதுநகர் மாவட்டம்.

3) திரு.வெங்கட்ராமன்,
உரிமையாளர்,
ஸ்ரீ பாலாஜி மஹால் திருமண மண்டபம்,
புல்லக்கோட்டை ரோடு,
சிவகாமிபுரம், பைபாஸ்,
விருதுநகர்.

4)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5)ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

29/4/25
செயலாளர்